1990 மார்ச் 29]

(ஆ) பெரியாறு ஆயக்கட்டின் கீழ் உள்ள சில பாசனப் பகுதிகள் மற்றும் திருமங்கலம் பிரதானக் கால்வாயையொட்டியுள்ள பயிர் செய்யப்பட்டுள்ள நிலங்களுக்குத் தண்ணீர் விட வேண்டியதன் அவசியம் குறித்து.

திரு. இரா. சாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரியாறு-வைகை நீர்த் தேக்கத்தினுடைய ஆயக் கட்டில் திருமங்கலம் பிரதானக் கால்வாயில் செய்தி 1, செய்தி 2 என்று உள்ளடக்கியப் பகுதியில் சுமார் எட்டு ஆயிரம் ஏக்கர் நெல் சாகுபடி விவசாயம் செய்து, இப்போது விளை கின்ற தருவாயில் தண்ணீர் இல்லாத காரணத்தால் அத்தனை ஏக்கர் நிலங்களும் காய்ந்து சாவி ஆகிவிடுமோ என்ற அச்சத் துடன் கூடிய பயத்தால் அந்தப் பகுதி மக்கள் இருக்கிறார்கள். எனவே, திருமங்கலம் பிரதானக்கால்வாயில் உள்ள எட்டு ஆயிரம் ஏக்கர் நிலத்திற்கு ஒரு முறை பெரியார்-வைகை நீர்த் தேக்கத்தி லிருந்து சுமார் ஒரு வாரத்திற்கு தொடர்ந்து தண்ணீர் விட்டு அப்பயிர்களைக் காப்பதற்கு மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருமங்கலம் பிரதானக் கால்வாயை ஒட்டி உள்ள நிலங்களில் சுமார் எட்டு ஆயிரம் ஏக்கரில் பயிர் செய்யப் பட்டுள்ளது. அவைகளைக் காப்பதற்கு 240 மில்லியன் கன அடி தண்ணீர் விட வேண்டும். அதேபோல் பெரியார் பாசன ஒரு போகப் பகுதியில் 10 ஆயிரம் ஏக்கரில் இரண்டு போக பயிர் செய் யப்பட்டுள்ளது. அதில் ஐந்து ஆயிரம் ஏக்கரில் அறுவடை நடந்து விட்டது. மீதி இருக்கின்ற ஐந்து ஆயிரம் ஏக்கர் பயிர்களைக்காக்க 250 மில்லியன் கன அடி தண்ணீர் விட வேண்டும் என்ற கோரிக் கையை மாண்புமிகு உறுப்பினர் திரு. சாமிநாதன் அவர்களும், மாண்புமிகு உறுப்பினர் திரு. வல்லரசு அவர்களும் என்னிடத்தில் தெரிவித்தார்கள். அரசு அதிகாரிகளோடு கலந்து பேசி பெரியார் பாசன பகுதியிலும், திருமங்கலம் பிரதான கால்வாய் ஆகிய இரண்டிலும் சேர்ந்து 490 மில்லியன் கன அடி தண்ணீர் திறந்து விட அரசு உத்தரவிட்டு இருக்கிறது என்ற செய்தியை நான் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. பி. என். வல்லரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசுக்கு குறிப்பாக மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.